| Headline | 85pct of high electricity bills complaints resolved: TNB | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Malar | | |
| Date | 14 Jun 2019 | Language | Tamil |
| Circulation | 22,000 | Readership | 180,000 |
| Section | NEWS | Page No | 6 |
| ArticleSize | 157 cm² | Journalist | NULL |
| PR Value | RM 2,421 | | |
| | | | |



# 85 சதவீத புகார்களுக்கு டிஎன்பி தீர்வு கண்டது

பங்சார், ஜூன் 14–

மின்கட்டணம் உயர்த்தப்பட்டதாக நாடுமுழுவதும் செய்யப்பட்ட புகார்களில் 85 சதவீதத்திற்கு டிஎன்பி எனப்படும் தெனாகா நேஷனல் பெர்ஹாட் தீர்வு கண்டுள்ளது.

நேற்று முன்தினம் வரைக்கும் டிஎன்பி 15,000 புகார்களுக்கு தீர்வு கண்டு விட்டது என்ற அதன் தலைமை செயல்முறை அதிகாரி 3,500 புகார்களுக்கு மட்டும் தீர்வு காணப்படவில்லை என்றார்.

அனைத்து புகார்களும் முழுமையாக தீர்க்கப்பட்ட பின்னரும்இந்த பிரச்சினை ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை கண்டறிய தமது தரப்பில்

TENAGA NASIONAL

முழு விசாரணை மேற்கொள்ளப்படும் என்று அமீர் ஹம்ஸா கூறினார். தீர்க்கப்படாமல் உள்ள 3,500 புகார்கள் மீது துல்லியமான விசாரணை மேற்கொள்ளப்படும். விசாரணையில்டிஎன்பிமீதுகுற்றம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் கூடுதலான கட்டண தொகை திருப்பி அளிக்கப்படும்.

எரிபொருள் ஆணையம் டிஎன்பி மீது விதிக்கக் கூடிய அபராதம் பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் பயனீட்டாளர்களின் புகார்களை தீர்ப்பதில் மீது மட்டுமே தமது நிறுவனம் தற்போது கவனம் செலுத்தி வருகிறது என்றார்.

Powered by: iSENTIA